DINAMALAR

PAGE NO: 01

DATE: 02.10.2023

# புதுச்சேரி பல்கலையில் சர்வதேச கருத்தரங்கம்

புதுச்சேரி,அக்.2–

பல்கலைக்கழகத்தில் ஐந்து நாள் சர்வதேச கருத்தரங்கம் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறை, சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளி, இந்திரா காந்தி தேசிய கலை மையம் புதுச்சேரி மண்டலம் சார்பில் ஐந்து நாள் சர்வதேச கருத்தரங்கம் நடந்தது.

பல்கலைக்கழக கலாசார பண்பாட்டு மையத்தில் நடந்த,கருத்தரங்கில் தாந்த்ரீக மதம், தத்துவம், இலக்கியம், வழிபாடு, கலை, வரலாறு மற்றும் தொடர்ச்சிகள் விவாதிக்கப்பட்டது.



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த ஐந்து நாள் தாந்த்ரீகம் குறித்த சர்வதேச கருத்தரங்கில் கவர்னர் தமிழிசை, இந்திரா காந்தி தேசிய கலை மையம் புதுச்சேரி மண்டல இயக்குநர் கோபால், தீட்டிய சுயம் ஓவியம் என்ற புகைப்படத்தினை வெளியிட்டார்.

இந்தியா முழுவதும் இருந்து 60 க்கும் மேற்பட்ட அறிஞர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கவர்னர் தமிழிசை, தீபகற்ப இந்தியாவில் கடல்சார் வர்த்தகம் என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.

இந்திரா காந்தி தேசிய கலை மையம் புதுச்சேரி மண்டல இயக்குநர் கோபால், தீட்டிய சுயம் ஓவியம் என்ற புகைப்படத்தினையும் வெளியிட்டார்.

கருத்தரங்கில் தாந்த்ரீக மதத்தின் கலாசார வெளிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அரவிந்தர் ஆசிரமம் தாந்த்ரீக கலை குறித்த கலைகண்காட்சி நடந்தது.

தொடர்ந்து தெலுங்கானாவின் பெரிணி சிவ தாண்டவம்,புதுச்சேரியின் பரத நாட்டியம்,கேரளாவின் தெய்யம் நடனம் நிகழ்ச்சிகளும் நடந்தன. ஐந்து நாட்கள் நடைபெறும் சர்வதேச கருத்தரங்கு கடைசி நாளில் சிதம்பரம் கோவிலுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.